# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2021 சனவரி

## (203) வணிகச் சட்டம்

## பகுதி - A

**வினா இல. 01**

இவ்வினா 25 புள்ளிகளுக்காக 14 நோக்கச் சோதனை வினாக்களை (OTQs) கொண்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு விடையளிக்கப்பட்டிருந்தது. குறிப்பிடத்தக்களவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கான மொத்தப் புள்ளிகளில் 20 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

பரீட்சார்த்திகள் **பகுதி A** இற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கு குடியியல் சட்டம், குற்றவியல் சட்டம், பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம், கம்பனிச் சட்டம், ஒப்பந்தச் சட்டம், சர்வதேசச் சட்டம், தொழில் சட்டம் போன்ற சட்டங்களைப் பற்றிய நல்ல அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் **1.4, 1.8, 1.9, 1.13, 1.14** ஆகிய இலக்கங்களைக் கொண்ட வினாக்களுக்கு சரியான விடையளிக்கத் தவறியிருந்ததை அவர்களது விடைகளிலிருந்து அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அவை கீழ்வருமாறு:

**1.4** இந்த வினாவில், ஒப்பந்தச் சட்டத்தின்படி ''ஏற்பனவு'' உடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவுசெய்யுமாறு கேட்கப்பட்டது. ஏற்பனவு பொதுவாக வழங்க முற்படுபவருக்கு வாங்க முற்படுபவரால் அளிக்கப்படும் நிபந்தனையற்ற இணக்கம் எனக் கருதப்படுகிறது. எவ்வாறாயினும், வழங்க முற்படுபவர் மற்றும் வாங்க முற்படுபவர் ஆகிய பதங்களை பிழையாக விளங்கிக் கொண்டதன் காரணமாக பெரும்பாலான பரீட்சார்த்திகள் விடை இல. (4) ஐத் தெரிவு செய்திருந்தனர்.

**1.8** "உதவிபுரியப்பட்ட ஒப்பந்தங்கள் பொதுவாக செல்லுபடியற்றதாக இருப்பதுடன் அவை பராயமடையாதவர்களைக் கட்டுப்படுத்தாது'' என்னும் கூற்று சரியானதா அல்லது தவறானதா என்பதைக் குறிப்பிடும்படி இங்கு கேட்கப்பட்டது. இக்கூற்று தவறானதாக இருந்த போதிலும், குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியானது எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.9** பணியிலுள்ள காலத்தில் பணியாளர் ஒருவரால் கையாடல் செய்யப்பட்ட எந்தவொரு பணத் தொகையையும் செலுத்த வேண்டிய பணிக்கொடைத் தொகையிலிருந்து கழிக்க முடியாது'' என்னும் கூற்று சரியானதா அல்லது தவறானதா எனக் கேட்கப்பட்டது. இந்தக் கூற்று தவறானதாக இருந்த போதிலும் அதிகளவான பரீட்சார்த்திகள் அது சரியான கூற்று எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.13** இங்கு, பதிவு செய்யப்பட்ட வர்த்தகக் குறியீடொன்றின் உரிமையாளர் ஒருவர் அனுபவிக்கக் கூடிய உரிமைகளை நிரற்படுத்துமாறு கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்களவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை. இவ்வினாவுக்கு விடையளித்திருந்தவர்கள்கூட சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**1.14** சர்வதேச வர்த்தகப் பிணக்கொன்றைத் தீர்ப்பதற்கு பயன்படுத்தக்கூடிய பிரதான பிணக்குத் தீர்க்கும் முறைகளைக் குறிப்பிடும்படி இங்கு தேவைப்படுத்தப்பட்டது. இது வர்த்தகப் பிணக்குகள் தொடர்பான மிகவும் குறிப்பான ஒரு வினாவாக இருந்த போதிலும், சிலர் இதனை தொழில் பிணக்குகள் எனப் பிழையாக விளங்கியிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## பகுதி - B

**வினா இல. 02**

பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம் பற்றிய அறிவு இவ்வினாவின் மூலம் பரீட்சிக்கப்பட்டது. இது பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தில் உள்ளடக்கப்படுகின்ற பொருட்கள் விற்பனை ஒப்பந்தம் தொடர்பான உட்கிடை நிபந்தனைகள் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக விசேடமாக வடிவமைக்கப் பட்டிருந்தது.

பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்துடன் இணைந்துள்ள உட்கிடை நிபந்தனைகள் என்ன என்பது பற்றிய எவ்வித எண்ணவோட்டங்களும் அதிகமான பரீட்சார்த்திகளிடம் காணப்படவில்லை, இங்கு பொருளின் மாதிரி அதேபோன்று பொருளின் விபரங்கள் மூலம் பொருள் விற்பனையொன்று நிகழுமிடத்து, பொருளானது விபரத்துடன் மட்டுமன்றி மாதிரியுடனும் பொருந்துதல் வேண்டும். இந்த உண்மையை பெரும்பாலான பரீட்சார்த்திகள் புரிந்துகொண்டிருக்கவில்லை. அதற்கிணங்க, இந்த இரு சந்தர்ப்பங்களிலும் அந்தந்த அப்பாவியான தரப்புகள் **சஞ்ஜய**விற்கு எதிராக சட்ட நடவடிக்கையை எடுக்க முடியும்.

ஒரு கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே வினாவைச் சரியாக விளங்கிக்கொண்டு சரியாக விடையளித்து வினாவுக்கான முழுப் புள்ளிகளையோ அல்லது பெரும்பாலான புள்ளிகளையோ பெற்றிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

**வினா இல. 03**

இவ்வினா ''அவசியத்தன்மை நிமித்தமான முகவராண்மை'' பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. இந்த வகையில், முதல்வரின் அறிவுறுத்தலை நாட முடியாத அவசரமானதொரு சந்தர்ப்பத்தில் தனது முதல்வர் சார்பாக முகவர் ஒருவர் ஒப்பந்தத்தில் ஈடுபடுகிறார். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், முகவராண்மை அவசியத்தின் அடிப்படையில் உருவாக்கப்படுவதுடன், முதல்வர் முகவரின் நடவடிக்கைகளால் பிணைக்கப்படுகிறார். எவ்வாறாயினும், பூர்த்தி செய்யப்பட வேண்டிய முன் நிபந்தனைகள் பல காணப்படுகின்றன.

இது ''முகவராண்மைச் சட்டத்தின்'' கீழ் வருகின்ற ஓரளவு இலகுவான வினாவாகக் கருதப்படலாம். குறிப்பிடத்தக்களவான பரீட்சார்த்திகள் இவ்வினாவைச் சரியாக அணுகியிருந்ததுடன் அவர்களால் ஓரளவு நல்ல புள்ளிகளையும் பெற முடிந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் வினாவில் தரப்பட்டிருந்த விடயங்களை மாத்திரம் குறிப்பிட்டிருந்த துடன், எவ்வித காரணங்களையும் குறிப்பிடாது, **சிறிபாலவுக்கு** ஏற்பட்ட நட்டத்தை புகையிரத சாரதி செலுத்தத் தேவையில்லை எனக் குறிப்பிட்டிருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகள், அவசியத்தன்மை மூலமான முகவராண்மை காணப்பட்டது என்பதைக் குறிப்பிட்டிருந்தனர் ஆயினும் நிபந்தனைகளைக் குறிப்பிடவில்லை. அதற்கிணங்க, அவர்களால் இவ்வினாவுக்கு நியாயமானளவு புள்ளிகளைப் பெற இயலவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## வினா இல. 04

இவ்வினா பங்குடமைச் சட்டம் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. பங்குடமை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க, ஒவ்வொரு பங்காளரும் நிறுவனத்தின் ஒரு முகவராக இருப்பதுடன் அவருடைய ஏனைய பங்காளர்கள் அவருடைய உண்மையான அதிகார நோக்கெல்லையினுள் காணப்படுவர் (வெளிப்படையான அல்லது உட்கிடையான), இது பங்குடமையைப் பிணைப்பதுடன், பங்குடமை வியாபாரத்தை நடத்திச் செல்கையில் வழமையாக இருக்கக்கூடிய எதையாவது செய்யும்போது ஒரு பங்காளர் பங்குடமையைப் பிணைப்பதற்கான ஒரு உட்கிடையான அதிகாரத்தை கொண்டிருப்பார்.

அதற்கிணங்க, பகுதி (a) இற்கான இந்த விடயத்தில், A மற்றும் B இனால் பெறப்பட்ட கடனைச் செலுத்துவதற்கு "C" இற்குக்கூட பொறுப்புள்ளது. எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட வினாவின் சட்டரீதியான தன்மையைச் சரியாக இனங்கண்டிருந்ததுடன் மிகவும் வெற்றிகரமான விடைகளையும் அளித்திருந்தனர்.

வினாவின் பகுதி **(b)** இல், நீதிமன்றம் பங்குடமை ஒன்றைக் கலைக்கக்கூடிய மூன்று சந்தர்ப்பங்களைக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. இவ்வினாவுக்குக்கூட பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடை அளித்திருந்தனர். ஒரு கையளவு பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்கு சரியான விடை அளித்திருக்கவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## வினா இல. 05

மாற்றத்தகு சாதனங்கள் பற்றிய அறிவு இவ்வினாவின் மூலம் பரீட்சிக்கப்பட்டது.

**பகுதி (a)** இல், தரப்பட்ட மாற்றுண்டியலுடன் தொடர்புபட்டுள்ள பிரதான தரப்பினர்களை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. இது ஒரு இலகுவான வினாவாக இருந்தபோதிலும், அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்திருக்கவில்லை. தரப்பட்ட மாற்றுண்டியலுடன் தொடர்புடைய தரப்பினரின் பெயர்களைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக அவர்கள் வினாவில் தரப்பட்டிருந்த பெயர்களை வெறுமனே குறிப்பிட்டிருந்தனர்.

**பகுதி (b)** இல், செல்லுபடியான மாற்றுண்டியல் ஒன்றின் அம்சங்களைக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. இந்தப் பகுதிக்கு பெரும்பாலானவர்கள் சரியாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், சிலர் மாற்றுண்டியலின் அம்சங்களைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக காசோலை ஒன்றின் அம்சங்களைக் குறிப்பிட்டிருந்தனர்.

**பகுதி (c)** இல், மாற்றுண்டியல் ஒன்றிற்கும் காசோலை ஒன்றிற்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. இவ்வினாவுக்குக்கூட பெரும்பாலான பரீட்சார்த்திகளால் சரியாக விடை அளிக்கப்பட்டிருந்ததுடன் மிக நல்ல புள்ளிகளையும் அவர்களால் பெறக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், ஒரு கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடை அளித்திருக்கவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## வினா இல. 06

இவ்வினா இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல்வேறு சட்டங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது.

இவ்வினாவின் **பகுதி (a)** இல், 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் பரிவர்த்தனைகள் சட்டத்தின் நோக்கங்கள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டிருந்தது. இவ்வினா பெரும்பாலான பரீட்சார்த்தி களால் விடையளிக்கப்படாத வினாவாக இருந்தது. ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் அந்த விடைகளும்கூட தவறானதாகவே இருந்தன. இந்தப் பாடப்பரப்பை பரீட்சார்த்திகள் முறையாகக் கற்கவில்லை என்பது அவர்களுடைய விடைகளிலிருந்து தெரிய வந்தது.

பகுதி **(b)** இல், 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் பரிவர்த்தனைகள் சட்டத்தின் பிரயோக நோக்கெல்லையிலிருந்து வெளியேற்றப்பட்ட உறுப்புரைகளை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் இப்பகுதியை பணச் சலவைச் சட்டத்துடன் குழப்பி விளங்கியிருந்தனர். இந்தப் பகுதிகூட இதற்கு விடையளித்தவர்களால் மிகவும் மோசமாக விடையளிக்கப்பட்ட பகுதியாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கக்கூட இல்லை.

**பகுதி (c)** இல், 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின்படி அதன் தொழிற்பாடுகள்/ கடமைகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. மேற்படி 2 பகுதிகளையும் பொருட்படுத்தாது பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்த துடன் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் தொழிற்பாடுகளைச் சரியாகக் குறிப்பிட்டு இப்பகுதிக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை மோசமான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி - C</u>

### வினா இல. 07

**(A)** வினாவின் இப்பகுதியானது ஒப்பந்தச் சட்டம் மற்றும் காப்புறுதிச் சட்டம் தொடர்பாகத் தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புபட்ட **(a), (b), (c)** என 3 பகுதிகளைக் கொண்டிருந்தது.

**(a)** இந்தப் பகுதியானது **தினு** மற்றும் **ராம்** ஆகியோரால் தங்களது திருமணத்திற்காக செய்யப்பட்ட கொடுப்பனவு தொடர்பில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பரிகாரங்களை ஆராயுமாறு கேட்டிருந்தது. இந்தச் சம்பவத்தில், மறு அறிவித்தல் வரை எந்தவித தனிப்பட்ட விழாக்களையும் நடத்துவதற்கு அரசாங்கம் தடை விதித்ததன் காரணமாக திட்டமிட்டபடி தமது திருமணத்தை அவர்களால் நடத்த முடியாதிருந்தது. இந்த விடயத்தில், **தினுவும் ராமும்** ஹோட்டலுடன் செய்துகொண்ட ஒப்பந்தமானது அரசாங்கத்தின் தலையீட்டின் விளைவாக ஏற்பட்ட நிலைகுலைவு காரணமாக முடிவுறுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நல்ல புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும் ஒரு கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரம் சரியான காரணங்களை வழங்காது ஹோட்டலிடமிருந்து **தினுவும் ராமும்** பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியும் என வெறுமனே குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** இந்தப் பகுதி, **ராம்** இனால் செய்யப்பட்ட விண்ணப்பத்தை **ஜனஹித காப்புறுதிக் கம்பனி** நிராகரிக்க முடியுமா என்பதை விபரிக்குமாறு கேட்டிருந்தது. இது காப்புறுதிக் கோட்பாடு களுடன் தொடர்புடையதாகும். விசேடமாக காப்புறுதியின் மிகச்சிறந்த நன்னம்பிக்கையுடன் தொடர்புடையதாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் மிகச் சிறந்த புள்ளிகளையும் அவர்களால் பெற முடிந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்தப் பாடப் பகுதியை நன்கு கற்றிருக்கிறார்கள் என்பது அவர்கள் அளித்த விடைகளில் இருந்து தெரிய வந்தது.

**(c)** இந்தப் பகுதி, காரில் ஏற்பட்ட சேதம் தொடர்பில் **ராம்** இற்குள்ள சட்ட உரிமைகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. இது கூட காப்புறுதிச் சட்டத்துடன் தொடர்பானதாகும். விசேடமாக காப்புறுதியிலுள்ள அருகாமை உட்பிரிவுக் கோட்பாடு தொடர்பானதாகும். அதிகமான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு மிகவும் தெளிவான விடைகளை வழங்கியிருக்க வில்லை. ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே, காப்புறுதியில் அருகாமை உபபிரிவு உள்ளடக்கப்பட்டிருந்தால் மாத்திரம் இழப்பீடு வழங்குவதற்கு காப்புறுதிக் கம்பனி கடப்பாட்டைக் கொண்டுள்ளது என்ற விடயத்தைக் குறிப்பிட்டிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை ஓரளவு திருப்தியானது.**

**(B)** இவ்வினா ஊழியர்களின் தொழிலை முடிவுறுத்தும் சட்டத்தின் பிரயோகத்தன்மை பற்றியும் அது உள்ளடக்கப்படாத சந்தர்ப்பங்கள் பற்றியும் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவைப் பரீட்சித்திருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கவில்லை. விடை அளித்திருந்தவர்கள்கூட சரியான விடைகளை வழங்கியிருக்கவில்லை. ஏனெனில், 15 ஊழியர்களுக்கு மேல் இருக்கும் பட்சத்தில் மாத்திரமே ஊழியர்களின் தொழிலை முடிவுறுத்தும் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ஏற்புடையதாக அமையும் என்பதை அவரகள் ஏற்பிசைவு செய்திருக்கவில்லை. அத்துடன் 12 மாத கால தொடர்ச்சியான சேவைக் காலப்பகுதி ஒன்றினுள் 180 நாட்களை விடக் குறைந்த நாட்கள் பணி செய்த ஊழியர்கள்கூட இந்தச் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட மாட்டார்கள் என்பதைக்கூட அவர்கள் குறிப்பிட்டிருக்கவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள், இந்தக் குறிப்பிட்ட ஊழியர் இந்தச் சட்டத்தில் உள்வாங்கப்படாதிருப்பினும், சொல்லப்பட்ட சட்டத்தின்படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய முறையான உள்ளக ஒழுக்காற்று விசாரணையை நடத்தாது ஹமீட்டின் தொழிலை பூட்மார்ட் முடிவுறுத்தியிருப்பதை சரியானதாகக் கருத முடியாது எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக இல்லை.**

**- - -**

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகப் படிப்பதுடன் அடிக்கடி பரீட்சிக்கப்படும் விடயங்கள் மீது கூடிய கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** வினாவை மிகக் கவனமாக வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை எழுதவும்.

**(3)** வினைச் சொல் நிரல் ஒன்று வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல்லின் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் பாடநூல், மேலதிக புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை படிக்கவும்.

**(5)** வினாத்தாளுக்கு விடையெழுதும்போது விடயங்களைச் சரியாக இனங்கண்டு அவற்றை அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக் கருக்களுடன் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் துல்லியமாக எழுதப்பட்டிருப் பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள்.

**(8)** கடந்தகால வினாத்தாள்கள் மற்றும் விடைகளைக் கற்பதன் மூலம் உங்கள் அறிவினை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

**(9)** முறையான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

**(10)** விடைத்தாள்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலகங்களும் சுட்டெண்ணும் உரியவாறு உரிய இடங்களில் இடப்பட்டுள்ளனவா என்பதை முறையாகப் பரீட்சியுங்கள்.

**(11)** முன்னாயத்தத்துடனும் வெற்றியடையும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றுங்கள்.

- * * * -